## சுருக்கம்

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருமதி சோ.கனிமொழி, த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு எம்.சோலை - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - விதிகளைத் தளர்த்தி பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொதுப்பணித்(பி1) துறை

அரசாணை (2ப) எண்.20

நாள் : 29.07.2022
சுபகிருது, ஆடி - 13
திருவள்ளுவர் ஆண்டு, 2053

**மீண்டும் படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.

**மேலும் படிக்கப்பட்டவை:-**

2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மதுரை மண்டலம், பொதுப்பணித்துறை, மதுரை அவர்களின் கடிதம் எண். பி1/1735/2020, நாள் 10.06.2020, 04.12.2020, 16.03.2021, 22.07.2021, 06.01.2022 மற்றும் 24.03.2022.

----

**ஆணை:-**

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் சிவகங்கை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் இயங்கும் காரைக்குடி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தில் மஸ்தூராக பணிபுரிந்து வந்த திரு எம்.சோலை என்பவர் 17.09.2002 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவி திருமதி எஸ்.வாசுகி என்பவர் தமது வாரிசுதாரர்/ மகளான திருமதி சோ.கனிமொழி என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க கேட்டுக் கொண்டதன் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் திருமதி சோ.கனிமொழி என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் பணிக்கோட்டம், காரைக்குடியில் 01.03.2016 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியேற்று, தற்போது மின் உபகோட்டம், இராமநாதபுரம் அலுவலகத்தில் 02.05.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 01.03.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசின் ஆணை பெற்று வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கருத்துருவினை மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. கருணை அடிப்படையில் பொதுப்பணித் துறையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்படுவதற்கு முன்னரே திருமதி சோ.கனிமொழி (த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு எம்.சோலை) என்பவருக்கு திருமணம் ஆகியுள்ளதால், தனியரின்பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித்துறையில், கருணை அடிப்படையில் அவர் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 01.03.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய, அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 54-A (தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணி நிபந்தனைகள் சட்டம் 2016 பிரிவு 15) மற்றும் பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து வழங்கும் பொருட்டு, அப்போதைய தமிழ்நாடுமாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 23(a)(ii) (தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28(2)) ஆகியவற்றைத் இச்சட்டத்தின் பிரிவு 58இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனியர் பொருட்டு ஆளுநர் அவர்கள் தளர்வு செய்கிறார்.

3. அதனடிப்படையில் திருமதி சோ.கனிமொழி அவர்களின் பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 01.03.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.13156/ட்டி.1/2022, நாள் 14.07.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண்.2806488/ஜி.1/2022, நாள் 21.07.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>:-

தலைமைப்பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம், மதுரை – 625 002.
திருமதி சோ.கனிமொழி, இளநிலைஉதவியாளர்.
(தலைமைப்பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம், மதுரைவழியாக)

<u>நகல்</u>:-

முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை - 18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1.8.22

பிரிவு அலுவலர்